SA – 523

**II Semester B.Com./B.B.M./B.H.M. Examination, April/May 2015**
**(CBCS) (Semester Scheme) (2014-15 and Onwards) (Fresh)**
**TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)**

Time : 3 Hours Max. Marks : 70

I. **விரிவான** விடை தருக :

1) பிரமபுரம் மேவிய பெம்மானது சிறப்புக்களை விளக்கவும். **10**

**அல்லது**

திருமழபாடி இறைவனை சுந்தரர் பாடிய முறைமையினைக் காட்சிப் படுத்துக.

2) ஔவையார் பாடல்களில் அமைந்துள்ள அறக்கருத்துக்களை விளக்குக. **10**

**அல்லது**

புகழேந்திப் புலவரது பாடற் சிறப்புக்களை உணர்த்துக.

II. **இடம் சுட்டிப்** பொருள் விளக்கம் தருக :

1) யாதும் சுவடு படாமல் **4**
ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்

**அல்லது**

'நானார் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை யாநறிவர்
வானோர் பிரான் என்னை ஆண்டில னேல்'

2) அரிது அரிது மானிடர் ஆதல் அரிது **4**
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது

**அல்லது**

........ 'வாலிது ரோபதையை மூக்கரிந்தது
அல்லவா மாபா ரதம்'

P.T.O.

III. இரண்டிற்குச் சிறு குறிப்பு வரைக. **(2×3=6)**

1) திருஞான சம்பந்தர்

2) மாணிக்கவாசகர்

3) ஒட்டக்கூத்தர்

4) புகழேந்திப் புலவர்

IV. இரு கதைகளைத் திறனாய்க. **(2×14=28)**

1) மாதா

2) அதை மறந்திட்டீங்களேய்யா

3) இடியுடன் கூடிய மழைநாளில்

4) வெறுங்கூட்டுக்குள்.

V. **மூன்றில்** ஒரு பங்காகப் சுருக்குக: **8**

ஆற்றிலே புது வெள்ளம் வருவதைப் பார்ப்பவர்கள் பாக்கியசாலிகள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் பாக்கியசாலிகள் என்பது உண்மையாகவே தான் இருக்க வேண்டும். மூன்று நான்கு மாசத்து அழுக்குகளை யெல்லாம் அடித்துக் கொண்டு நுரையும் திரையுமாக செக்கச் செவேலென்று புது ஜலம் வெண்மணலிலே பாம்பு போல பாம்பு நாக்கை நீட்டி நீட்டிக்காட்டுவது போல- நெளிந்து நெளிந்து வரும் காட்சியே புனிதமானதுதான். ஒரு தரம் பார்த்திருப்பவர்கள் அது புனிதமானது தான் என்று ஒப்புக் கொள்வார்கள். புனிதம் என்று எதுவுமே உலகில் இல்லை என்று சொல்கிறவர்கள் முதலில் காவேரியில் புது வெள்ளம் வருவதைப் போய் பார்த்து விட்டு வந்து சொல்லட்டும். எங்கேயோ, எட்டாத் தொலைவில் உள்ள கடல் என்கிற ஒரு லஷ்யத்தை நோக்கி எவ்வளவோ கஷ்டங்களையும் பொருள்படுத்தாமல் ஊர்ந்து ஊர்ந்து நகர்ந்து கொண்டிருக்கிறது அந்த ஆறு. ஒரு வருஷத்திய உணவுக்கு, ஒரு வருஷத்திய சுக சௌக்கியங்களுக்கு -தான் என்கிற தனி ஒரு மனிதனுடைய உணவுக்கு மட்டும் அல்ல; பெண்டு பிள்ளைகள், அன்புடையவர்கள், விரோதிகள், அன்போ விரோதமோ இல்லாதவர்கள், எல்லோருக்குமே உணவுக்கு அடிப்படை நீர்ப் பெருக்குத்தான் என்று எண்ணியிருப்பவர்கள் நம்பி இருப்பவர்கள் ஆற்றிலே புது வெள்ளம் வருவதை எப்படிப் பார்பவர்கள் என்று கற்பனை செய்து பார்க்க வேண்டும் ! அப்போதுதான் புது வெள்ளத்தின் அருமை புரியும் !

---